REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 287

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: வைகாசி 2உ சனி (15—5—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 3உ ஞாயிறு (16—5—54)

மொழிவழிப் பிரிவினை — முதற் படி!

(★)

திராவிடத்தின் முழு விடுதலை — தி. மு. கழகத்தின் குறிக்கோள்

சித்தூர்-நாஞ்சில் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டும்

ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் திராவிட முன்னேற்றக் கழக செயலாளர்கள் அறிக்கை

15—5—54 காலை 11 மணிக்கு சென்னை சர்க்கார் காரியாலயத்தில், ராஜ்யப் புனர் அமைப்புக் கமிஷனிடம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. ஆகியோர் தந்த அறிக்கையின் விபரம் வருமாறு:—

(1) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ராஜ்யங்களைத் திருத்தி அமைக்கும் பிரச்சினை பற்றிய இந்த அறிக்கையை, மிக்க மகிழ்வுடன் உங்கள் பார்வைக்கு வைக்கிறோம். இந்த அறிக்கையில் பொதிந்துள்ள கருத்துக்கள், இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த அரசியல் உணர்வு பெற்ற பெரும் பகுதியினரின் குரலாகும். இந்த ராஜ்யம் முழுவதும், குறிப்பாக தமிழகத்திலும், பட்டி தொட்டி, நாடு நகரமெங்கும் பரந்துள்ள ஏறக்குறைய ஆயிரம் கிளைக் கழகங்கள் மூலம், அவர்களுடன் மிக்க நெருங்கிய தொடர்புள்ள திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களின் குரலை பிரதிபலிக்கிறது என்பதை கூற விரும்புகிறோம்.

(2) இந்த கமிஷன் அமைக்கப்பட்டிருக்கும் சம்பவமே, மக்கள் குரலுக்கு இணங்க ராஜ்யங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது அவசர அவசியமாகிவிட்டது என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறுகிறது. தற்போதைய அரசியல் அமைப்பில் உள்ள குழப்பத்திற்கும், சிக்கல்களுக்கும், இந்த கமிஷன் வழிவகை காணும் என திராவிட முன்னேற்றக் கழகம் பெரிதும் நம்புகிறது.

(3) ஆலோசனையில் இருக்கும் பிரச்சினை பற்றி எங்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் முன்பாக, முன்னுரையாக தற்போதைய அரசியல் அமைப்பு பற்றிய சில முக்கிய அம்சங்களை— ராஜ்யங்கள் எப்படிப் பிறந்தன, எப்படி வளர்ந்தன என்ற விளக்கத்துடன் கூற விரும்புகிறோம். தற்போதைய அரசியல் அமைப்பு, பல நூற்றாண்டுகளாக மெள்ள மெள்ள, சில சமயங்களில் இயற்கையாகவும், வேறு சில சமயங்களில் செயற்கையாகவும் வளர்ந்ததன் விளைவு. அவை முழுதும் இந்த நாட்டை அடிமை கொண்ட அந்நிய அரசுகளால் செய்யப்பட்டன. அவர்களின் செயல் நல்ல எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்; நச்சு எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்; ஆனால் இந்த மண்ணுக்கு உரியதல்ல என்பது மட்டும் திண்ணம். ஓர் அந்நிய அரசு, சாதாரண இயல்புப்படியே, யார் மண்ணுக்கு உரியவர்களோ அவர்களின் எண்ணங்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வழி வகைகள் காண முடியாது. எனவே, வலம் பொருந்திய, உறுதியான, திறமை மிக்க அரசாங்கத்தை நிறுவுவதே அவர்களின் ஒரே குறிக்கோளாய் விளங்கியிருக்கிறது.

(4) ஆகவேதான், பரந்த இந்திய உபகண்டமானது இன்றைய தினம் வலித்து திணிக்கப்பட்ட பல நிர்வாகப் பகுதிகளின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது. இந்த அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அவர்களுக்கு ஆயுதமாக இருந்தது அறிவல்ல—அதிகாரக் கோலாகும். இந்தத் தவறை எடுத்துக் காட்டிய பெருமை, நிச்சயமாக காந்தீயக் காங்கிரசுக்கே சாரும்; வெறும் நிர்வாக மண்டலங்களுக்குப் பதிலாக, இயற்கையான, ஒருமைப்பாடுள்ள, தேசீயப் பிரிவுகளுள்ள ராஜ்யங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற மொழிவழி பிரிவினைக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைத்து திறமையுடனும், தெளிவாகவும் காங்கிரஸ் வாதாடியுள்ளது. யார் மொழிவழி பிரிவினைக் கொள்கைக்காக வாதாடினார்களோ, அவர்கள் ஆளவந்தார்களாகிவிட்டனர்; ஆனால் மொழிவழிப்பிரிவினைக் கொள்கையை காங்கிரஸ் சர்க்காரே எதிர்க்கவும், கண்டிக்கவுமான விசித்திரமான நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய ஆளவந்தார், வெள்ளையரிடம் கற்ற வித்தையை வைத்துக்கொண்டு, ஏக இந்தியா, இந்தியாவின் ஒருமைப்பாடு என்பன போன்ற தங்களுக்கு 'செல்லமான' கொள்கைகளை வற்புறுத்துகின்றனர். ஏடுகளிலே படிப்பதற்கு சுவை மிகுந்த கொள்கைகளாக இவை காணப்படலாம்; ஆனால் நடைமுறையில், ஏற்கனவே இருந்தது போலவே, இந்தியாவின் பல்வேறு தேசீயப் பிரிவுகளையும் ஒன்றோடொன்று முரண்படும் போர்ப் பாதையில் துரத்தியுள்ளது. ஏக இந்தியா, இந்தியாவின் ஒருமைப்பாடு என்ற கொள்கைகளை எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் இந்திய உபகண்டமானது பல்வேறு தேசீயப் பிரிவுகளை— ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாவிட்டாலும், ஒன்றுடன் ஒன்று ஒரே வார்ப்பில் சேர்க்கப்பட விரும்பாத பல்வேறு தேசீயப் பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்துவிட முடியாது.

(5) ஒரு தேசீயப் பிரிவுக்கு வேண்டிய சகல அம்சங்களுடன் பண்டைப் பெருமைகளையும் சென்னை ராஜ்யம் (ஏற்கனவே இருந்தபடி) பெற்றுள்ளது. எனவே, சுயநிர்ணயம் பெறவும், தனக்கே உரிய தேசீயப் பண்பாடுகளையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வழிகோலவும் உரிமைபெற தகுதியுடையது என்பதற்கு மக்களின் சம்மதத்தையும், வரலாற்று ஏடுகளின் ஆதாரத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ளது. ராஜ்ய புனரமைப்புப் பிரச்சினையை முழுதும் இல்லாவிட்டாலும், முக்கியமாக இதைக் கண்கொண்டே பார்க்கிறோம். மொழிவழிப் பிரிவினை என்பது, பல்லாயிரக் கணக்கானவர் தத்தமது தாயகத்தைப் பெறவும், தங்களது அறிவால், ஆற்றலால், அதை சீராக்கிச் செம்மைப்படுத்தவும் விரும்பும், இதய எழுச்சியாகும். சுருங்கச் சொல்லின் இதுதான் தேசீய உணர்வாகும். மொழிப்பற்று இந்த உணர்வின் வெளிப்படை அம்சமாகும். வெறும் நிர்வாகப் பிரிவுகள் மூலம் தரப்படும் இடம், தங்களது தேசீய உணர்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி என்பதே அவர்களின் முக்கிய வாதமாகும். இந்த வாதத்தை ஒற்றுமை, கட்டுப்பாடு என்ற பெயரால் சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. கட்டுமஸ்தான காவற்காரனிடம் கனத்த கம்பையும் கொடுத்து, ஒரே தொழுவத்தில் பல விலங்குகளையும் அடைக்கச் செய்து பாதுகாப்பது ஒற்றுமையுமல்ல; ஒற்றுமையும் ஆகாது.

(6) மொழிவழி பிரிவினைக் கோரிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட மொழியின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல—ஆனால், ஒரு பொதுவான தாய்மொழியின் மூலம் உறவு கொண்ட ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம், தங்கள் இயற்கையான, தேசீய அவாக்களை நிறைவேற்றிக் கொள்ள ஒரே அரசியல் அமைப்பின் மூலம் சேர்ந்துவாழ வேண்டும் என்ற உண்மையை இக்கமிஷன் குறித்துக்கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகிறது. சுருங்கச்சொல்லின், குறிப்பிடத்தகுந்த வேற்றுமைகளையுடைய இரு சாராருக்கிடையில், ஒரு சாரார் மற்றொரு சாரார்மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதற்கு இது பலமான வாதமாகும். மொழிவழிப் பிரிவினையை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டுகிறது; அதற்காகப் போராடுகிறது; மொழிவழிப் பிரிவினை தனது நீண்ட பயணத்தின் முதற்படி என்று கருதுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில், சென்னை ராஜ்யம் (ஏற்கனவே இருந்தபடி) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழி வழிப் பிரிவுகளை உடையது—ஆகவே, இந்த நான்கு மொழி வழிப் பிரிவுகளை அமைப்பது தான் உடனடித் தேவை என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக் காட்ட விரும்புகிறது; இதைச் செய்யும்பொழுது எந்த ஒரு மொழிப் பிரிவும், மற்றொரு மொழிப் பிரிவின் நிலப் பரப்பை அபகரித்துக்கொள்ளாதவாறு அதிகாரத்திலுள்ளோர் முழு கவனம் செலுத்த வேண்டும். தொல்லையும், நெருக்கடியும் நிறைந்த நேரத்தில் மத்திய சர்க்கார் ஆந்திர ராஜ்ய அமைப்புக்கு அனுமதி அளித்தபோதிலும், மொழி வழிப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப்பட்டதுடன், தமிழகத்திற்கு உரிமைப்படி சேர வேண்டிய நிலப் பகுதிகளை ஆந்திரத்துடன் இணைத்திருப்பது கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் வருந்துகிறது. சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் பகுதிகள், எந்த நியாயப்படிப் பார்த்தாலும், ஆந்திர ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டியதாகும். அதுபோலவே, இன்றைய தினம் திருவிதாங்கூர்—கொச்சி ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் தமிழ் பேசும் பகுதியாகிய நாஞ்சில் நாடு பிரிக்கப்பட்டு தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். அத்துடன்கூட சென்னை ராஜ்யத்தில் உள்ள பெரும்பான்மையாக மலையாள மொழி பேசும் பகுதிகளை கேரள நாட்டுடன் சேர அனுமதிக்கப்பட வேண்டும்.

(7) தங்கள் தங்கள் பிரச்சினைகளைக் குறித்து கனன்று எழும்போது, அரசியல் சொத்தளிப்பாக மாறக்கூடிய பல வலிமையான இயக்கங்கள் உருவாகியுள்ளன; எனவே, அதிருப்தியும், பகைமை உணர்வும் கொடிய உருவெடுக்கு முன்பு, எல்லைக் கமிஷனோ, அல்லது எல்லைக் கமிஷன்களோ நேரிய வழிகளில் தங்கள் பணியினைத் துவங்க வேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது. சென்னை, பம்பாய், மைசூர், ஹைதராபாத் ராஜ்யங்களிலுள்ள கன்னட மொழி பேசும் பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு கர்நாடக ராஜ்யமாக உருவாக்கப்படுவதற்கு உரிமையுடையன. இந்த உரிமைக் கோரிக்கையும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதுபோலவே ஹைதராபாத் பகுதியிலுள்ள தெலுங்கு பேசும் பகுதிகள் மீது ஆந்திரர் கொண்டாடும் உரிமை நியாயமானதாகும். விசால ஆந்திரம், சம்யுக்த கர்நாடகம், ஐக்கிய கேரளம், தமிழகம் என்ற பெயரால் உலவும் கோரிக்கைகளை திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதுடன் வரவேற்பதுடன், ஆதரவுமளித்து வருகிறது. கொழுந்துவிட்டு எரியும் நிலையில் உரு

(தொடர்ச்சி, 3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—5—54 சனி

பசி, அவ்வளவு!

“ஐயன் சிங்காரங்களைப் பாரும்; வரதன் வரும் வைபோகம் தன்னைக் கண்ணால் காணும்”—என்று பாடி பரவசமாகி, இடிபட்டு மிதிபட்டு, ‘ஐயய்யோ இதென்ன அக்கிரமம்,’ என்று அருவருப்புடன் அலறும் ஆரணங்குகளும். ‘காதைப் பார்த்துக்கொள்; கழுத்து ஜாக்கிரதை,’ என்று அவர்களுக்கு ஆறுதல் கூறிப் பாதுகாக்கும் ஆடவரும் ஏராளமாகக் கூடிடும், காஞ்சிபுரம் வரதராஜர் கருட உற்சவத்தின்போது, காங்கிரஸ் சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பிரசாரம் செய்ய ஒரு கண்காட்சி அமைக்கிறார்களாம்!

மக்கள் திரண்டு சென்று, நாடாள்வோர் கூறும் நல்லுரை கேட்டு இன்புற்ற ஆவலுடன் துடித்த காலம் மலையேறிவிட்டது; இப்போது மக்கள் எக்காரணத்துக்காகவோ, எங்கோ கூடுகிறார்கள் என்றால், அங்கு சென்று அவர்கள் காதிலே நமது விஷயத்தைத் திணித்துப் பார்ப்போம் என்று நாடாள்வோர் துடிக்கிறார்கள்; பாபம், பசி அவ்வளவு! என் செய்வர்!!

பட்டை நாமம் பாகவதர் பகவன் நாமாவளியைப் பாடி ஆடி ஒருபுறம் இருப்பார்; பால் பர்பி, பாதாம் ஹல்வா — அசல் நெய், சுடச்சுட — என்று கூவிக் கூவி விற்கும் தள்ளு வண்டிக்காரன் ஒருபுறம் இருப்பான்; ‘தங்க நகை வாங்கிப் பணத்தைப் பாழாக்கிக் கொள்வானேன்—இதோ, மாயத் தங்கம்—விலை மலிவு—கருக்காது—கியாரண்டியுள்ளது,’ என்று விளம்பர போர்டு போட்டுக்கொண்டு, நகை வியாபாரி வேறோர் புறம் இருப்பான்; பல் ஆட்டம், ஈர் அழுகல் இத்தியாதி சகலம் எல்லாம் போக்கி, பல்லை வெண்மையாக வைத்திருக்க உதவும் முத்து பற்பொடி; செந்தாமரையோ என்று சித்[illegible]ருக உங்கள் கணவன் கூற வேண்டுமா, இதோ ரோஸ் பவுடர்; அபக்காந்த சென்ட்; அம்பாலா அத்தர்; பம்பாய் பீடா; கல்கத்தா ரசகுல்லா — என்றெல்லாம் தத்தமது சரக்குகளை காட்டி விலை கூறி விற்பர்—திருவிழாவுக்காகக் கிளம்பும் அங்காடியில்—அந்த வரிசையிலே, “நேரு பண்டிதரின் கீர்த்தியான திட்டம்—அமெரிக்கா பார்த்து ஆச்சரியப்படும் திட்டம்—பொட்டல் காட்டைப் பூஞ்சோலையாக்கும் திட்டம்—பொன் விளையும் பூமியாக பாரதத்தைச் செய்யும் திட்டம்—அற்புதமான ஐந்தாண்டுத் திட்டம்—வாரீர், பாரீர்,” என்று கூவிக் காட்டக் கிளம்பியிருக்கிறார்கள், ஆளவந்தார்கள்!

பக்தி வேண்டிச் சென்று பலவித நோய் பெற்றுத் திரும்பும் கூட்டம், இப்போது, இக்காட்சியையும் காணும்! அற்புதம்! அற்புதம்!! சர்க்காரின் திறமையே திறமை!!

ஐந்தாண்டுத் திட்டத்தின் மகிமையை—ஐயன் சிங்காரத்தைக் கண்டு ஆனந்தம் கொண்டு, சாலோக சாமீப சாயுச்யப் பதவியைப் பெறக் கூடிடும் பக்தகோடிகளுக்கு எடுத்துக் காட்ட கண்காட்சி நடாத்துவது, சரிந்து போயிருக்கும் செல்வாக்கைச் சரிப்படுத்த உதவும்—என்று, காங்கிரசார் கருதுகிறார்கள் போலும்!

எதைச் செய்தாவது, எவ்வளவு சிரமப்பட்டாவது, தேய்ந்துவரும் செல்வாக்கை மீண்டும் வளர்த்துக்கொள்ள எண்ணுகிறார்கள்; எனவேதான், நகைக்கத்தக்க வகையிலே எல்லாம் முறைகளைத் தேடி அலைகிறார்கள்!

காலரா உண்டாகும் விதத்தையும், பிளேக் ஏற்படும் காரணத்தையும், மலேரியாவை மூட்டிவிடும் கொசுவின் தொல்லையையும், படம் போட்டுக் காட்டுவதுபோல, ஐந்தாண்டுத் திட்டத்தையும் படம் போட்டுக் காட்டிப் பிரசாரம் செய்யப் போகிறார்களாம்!

ஐந்தாண்டுத் திட்டத்தின் மேன்மையையும் பலனையும் எடுத்துச் சொல்லத் தவறிவிட்டது போலவும், அதை மட்டும் தக்கவிதமாக எடுத்துரைத்தால், மக்கள் கண்களிலே ஆனந்தஒளி வீசிடும் விதமாகி, ‘எங்கே தேசோத்தாரகர்கள்! எங்கே நாட்டைக் காத்திடும் நல்லவர்கள்! எங்கே பாரத வீரர்கள்! அவர்களைக் கண்டு, என் மகிழ்ச்சியை, வாழ்த்தை, வணக்கத்தைத், பாராட்டுதலைத் தெரிவிக்கவேண்டும்,’ என்று மக்கள் ஆர்வத்துடன் கூறி, ‘அடுத்த ஐந்தாண்டு மட்டுமல்ல — ஐந்து ஐந்தாண்டுகாலம் அவர்களே ஆளவேண்டும்’ என்று கூறுவார்கள் என்றும், ஓர் தவறான கருத்து முளைத்திருக்கிறது, ஆளவந்தார்களுக்கு!

சிலர், இதனாலேயே, ‘ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி மக்களிடம் பிரசாரம் செய்ய வேண்டும்; அதற்கு ஒரு கமிட்டி அமைக்கவேண்டும்,’ என்று பேசுகிறார்கள்!

காஞ்சிபுரம் திருவிழாவின்போது ஐந்தாண்டுத் திட்டப் பிரசாரக் கண்காட்சி நடத்தலாம் என்று தீர்மானித்திருப்பதும், இதே நோக்குடன் தான்!

இவர்கள் அறியார்கள் போலும்—இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைக் காங்கிரஸ் ஆட்சியினர் திட்டப்படி நடத்திச் செல்வதும், இவர்களுக்குக் கண்டனத்தைத்தான் பெற்றுத் தரும் வகையாக இருந்திருக்கிறது என்பதை!

புல்லாட்சியைப் போக்கிக் கருக்கிடும் பாசிசம் புரட்சிக்குப் பிறகு புதுயுகம் காண, சோவியத் ரஷியாவின் ஐந்தாண்டுத் திட்டம் என்று ஏற்பாடு ஏற்பட்டது; இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் ரஷியாவின் வளத்தையும், வாழ்வையும்—புரட்டு நிரம்பிய புள்ளி விவரங்களால் அல்ல-உலகோர் கண்டு ஒப்பத்தக்க, மதிக்கத்தக்க, பாராட்டத்தக்க வகையிலே, உண்டாக்கித் தந்தது! உலக வரலாற்றுச் சுவடியிலே பொன்னேடு என்றாயிற்று—அத்திட்டங்களும், அவை வெற்றிகரமாக்கப்பட்டதால், மக்கள் பெற்ற வாழ்வு வளமும்!

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதாம்! அதுபோலவே, ‘ரஷியா, ஐந்தாண்டுத் திட்டம் தீட்டினால், நாங்களும் தீட்டுகிறோம்,’ என்று இந்திய சர்க்கார் நீட்டோலை காட்டுகிறார்கள்; ஆனால் நோக்கம், முறை, வகை எனும் எதிலே நோக்கினாலும், ரஷிய ஐந்தாண்டுத் திட்டத்துக்கும் இந்திய ஐந்தாண்டுத் திட்டத்துக்கும் ஒப்பிட்டுக் காட்டவும் யோக்கியதையற்ற முறையே இருக்கிறது.

தோகையை எடுத்துக் கோழிக்கு ஒட்டிவிட்டால், மயில் ஆகிவிடாது! மாம்பழக் கொத்து ஒன்றைக் கட்டி வைத்துவிட்டால், வேம்பு, மா ஆகிவிடாது!!

பெயரளவில் ஐந்தாண்டுத் திட்டம் என்று இருந்துவிடுவதாலேயே ரஷியாவில் ஏற்பட்ட வளமும், வாழ்வும், வசீகரமும், மேம்பாடும், நமக்குக் கிடைத்துவிடாது!

ஆனால், ஊரை மயக்க அது உதவும் என்று எண்ணினர் ஆளவந்தார்கள்! மக்கள் ஏமாளிகளல்ல! — ‘ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து சர்க்கார்தான் வானளாவப் புகழ்கிறதே தவிர, குண்டூசி அளவுப் பலனும் நாம் காணவில்லையே! வறுமையும் வாட்டமும் நமக்கு வளருகிறது; அவர்களோ, கோடி கோடியாக நமது சுகத்துக்காகப் பணம் கொட்டிக் கொண்டிருப்பதாக கூறுகிறார்கள்; பஞ்சம் பசி போகக் காணோம்; அவர்கள் ஏதோ வளம் கொஞ்சும் என்று நல்வாக்குக் கொடுக்கிறார்கள்!—ஏன் இந்த வீணுரை” என்றுதான் மக்கள் எண்ணி ஏங்குகிறார்கள்!

பெரும் பொருள் பாழாக்கப்பட்டிருக்கிறது; அதிலும், வடநாடு வளத்திலும், தொழில் துறை முன்னேற்றத்திலும், மேலும் மேலும் வளருவதற்கான வகையே செய்யப்பட்டிருக்கிறது.

திட்டத்திலே தெளிவும், அதை நிறைவேற்றுவதிலே நேர்மையும் காணோம், புள்ளி விவரங்கள், பொய்த்துப் போகின்றன! போட்ட திட்டம் நாளுக்கு நாள் மாறுதலடைந்து, பொருளற்றுப் போகிறது!

இந்திய சர்க்கார் நிர்வாகத் துறையிலே நடைபெறும் ஊழலோ, உலகு நகைக்கும் கதையாகி விட்டது.

இது, ஐந்தாண்டுத் திட்டத்தின் இலட்சணம்! இந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்று, நேரு பண்டிதரின் உடன் பிறந்த அம்மையாரே, சென்னையில் பேசினார்கள்.

கோரிய பலன் கிட்டவில்லை; எதிர்பார்த்தது நடக்கவில்லை; என்னமோ எண்ணினோம், ஏமாந்து போனோம்; சீரான முறையிலே அமையவில்லை—என்று காங்கிரஸ் தலைவர்களே, திட்டத்தைப் பற்றி, அவ்வப்போது, குறைகூறிவிட்டிருக்கிறார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் சரியானதில்லை; சரியான பலன் தரவுமில்லை; மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை—என்று சர்க்காருக்கே தெரிந்த தகவல்தான் இப்போது, அவர்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தீட்ட முன்வந்துவிட்டனர்.

இது, திட்டத்தின் இலட்சணம்! இதற்கு ஒரு பிரசாரமாம்! திருவிழாக் கூட்டம் கிடைக்கிறது, இதற்கு!!

“ஒரு மண்டலம் சாப்பிட்டால், உடலில் உள்ள ரோகம் அத்தனையையும் ஓட்டி விடும்; மேனி பொன்போலாகும்; உடற்கட்டு இரும்பு போலாகும்; இமயமலை முனிவர் முறை; ஏழே பொட்டலம் தான் இருக்கிறது; விலை சகாயம்; ஒரு ரூபா நாலணா’—என்று கூவி விற்கும் குங்குமப்பொட்டுக்காரன், அதோ நிற்கிறான் — சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்ட பிரசார விளம்பர அமைப்புக்கு அருகில்—அவனுக்கு இலேசாகக் கருமேகம்!!

நாட்டின் நாயகர்கள்

[5]

[சி. என். அண்ணாதுரை]

கான்ஸ்டபிளிலிருந்து கவர்னர் வரையில், கார்டு முதற்கொண்டு கம்பியில்லாத் தந்தி வரையில், பஞ்சாயத்து முதற்கொண்டு பார்லிமெண்டு வரையில் இருந்தது—மெருகு கூடக் குலையாமல்!

இவ்வளவு வசதியுடன் தரப்பட்ட நாட்டைத் திறமையுடன் ஆண்டு, மக்களுக்கு நலன் கிடைக்கச் செய்வதற்குத் தவறிவிட்ட நாட்டின் நாயகர்கள், உண்மையை மறைக்க, மாமி போலப் பேசுகிறார்கள்.

நாடு சுடுகாடாக்கப்பட்டு இவர்களிடம் தரப்பட்டது போலவும், மண்மலையாகக் குவிந்து போயிருந்த எலும்புகளை அப்புறப்படுத்தும் வேலையிலிருந்து துவங்கி, இவர்கள் பாடுபடுவது போலவும், சட்டம் சமைக்கவும், நிர்வாக இயந்திரம் அமைக்கவும் அதனை நடாத்திச் செல்லப் பலருக்குப் பயிற்சி அளிக்கவும், மெத்தச் சிரமப்படுவது போலவும், இதற்குக் காலம் பிடிக்கும் என்றும் பேசி ஏய்க்கிறார்கள்.

கார்டு அளவு முதற்கொண்டு, கான்ஸ்டபிளுடைய உடை வரையிலே, துளி மாறுதலும் செய்ய வேண்டிய வேலைகூட இவர்களுக்கு ஏற்படவில்லை!! கோட்டு அளவிலிருந்து கோர்ட்டு முறை வரையிலே இருந்ததை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்—எதைப் புதிதாகக் கண்டுபிடித்துப் புகுத்தினார்கள்; எதிலே திறமை தனித்தன்மையுடன் தெரிகிறது; நெஞ்சில் கை வைத்து, நேர்மையாளர்கள் பதிலளிக்க வேண்டும். அமைச்சர்கள் அளிக்கும் பதில்கள் தயாரிக்கப்படும் முறை முதற்கொண்டு ஆகாய விமானம் ஓட்டும் பயிற்சி வரையிலே, ‘அவன்’ தந்ததைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடவி தரப்பட்டு அதனை அழகு நகராக்கியது போலவும், வெட்டித் தள்ளப்பட்ட பட்டுப்போன மரத்தை கனி குலுங்கச் செய்வது போலவும், ஒன்றுக்கும் உதவாத நாடு ஒப்படைக்கப்பட்டு, அதனை உருவும் எழிலும் உள்ளதாக ஆக்கப்படுவதற்கு இவர்கள் காலமெல்லாம் செலவிட்டுக் கஷ்டம் பல அடைவது போலவும் பேசுகிறார்களே, சரியா, நியாயமா? நாட்டின் நாயகர்கள் பேசும் பேச்சைக் கூர்ந்து கவனித்து நேர்மையாளர்கள், பதிலளிக்க வேண்டுகிறோம்.

ஆண்டு ஏழாகி விட்டது; நாடு முன்னேற பாதை எது என்பதும் கண்டுபிடிக்கப்படவில்லை; வளம் காணும் முறை யாது என்பது கண்டறியப்படவில்லை; வளம் எது என்றுகூடப் பொருள் கண்டாரில்லை!

பொக்கைவாய்க் கிழவன், தனக்கு மீசை சுருள் சுருளாக இருந்தபோது, மயான காண்டம், சுடலைகாத்த காட்சியில், ஊர் உருகப் பாடிய கூத்தினைப் பற்றி, கேட்போர் சலிக்குமளவு கூறிக்கொண்டிருப்பதுபோல, வாடும் மக்களிடம், சுயராஜ்யப் போர்பற்றிய பழங்கதையைப் பன்னப்பன்னிப் பேசி, பஞ்சடைந்த கண்ணினரை, புகழ்ப்பாமாலை தரும்படி கேட்ட வண்ணம் இருக்கிறார்கள்.

உலகிலே, இவர்களைவிடக் குறைந்த அளவுக்கு பொதுமக்கள் ஆதரவு பெற்ற தலைவர்களெல்லாம், வியக்கத்தக்க மாறுதல்களை, வீரமும், தீரமும் கொண்ட முறையிலே செய்துகாட்டி, மக்களை வாழவைத்திருக்கிறார்கள்.

இவர்களோ, எம்மை நாட்டின் நாயகர்களாகப் பெற்றீர்களே, பெறற்கரிய பேறு பெற்றீர்!—என்று பேசுகிறார்கள்! பலன் என்ன—என்று கேட்பவர்களையோ ஏசுகிறார்கள்! நியாயந்தானா!

நாட்டின் நாயகர்கள், யார், என்பது புரிந்து கொள்ளப்பட்டால், விளக்கப்படுத்தப்பட்டுவிட்டால், இப்போது நாட்டின் நாயகர்களாக்கப்பட்டுள்ளவர்கள், இதுபோலப் பேசி, ஏசித்திரிய மாட்டார்கள்.

மக்களே, உண்மையில் நாட்டின் நாயகர்கள்! இந்த அடிப்படை உண்மையை மக்கள் முழக்கமிட்டால்தான் நாட்டின் போலி நாயகர்கள் நல்லறிவு பெறுவர்—நல்லாட்சி கிடைக்கும்.

மக்கள் இன்று அதற்கான விழிப்புணர்ச்சி பெற்றுக்கொண்டுதான் வருகிறார்கள்; அந்த விழிப்புணர்ச்சி பெறச் செய்வதற்கு, நாமும் நமது அளவில், தொண்டாற்ற முடிகிறதே என்பதை எண்ணியே மகிழ்கிறோம்.

நாடு வாழ, மக்கள் விழித்தெழ வேண்டும்!!

இந்தோ-சீனப் போர்: மாலடோவ் யோசனை

நடுநிலைமைக் கமிஷன் நியமிக்க வற்புறுத்துகிறார்

ஜினீவா, மே 14—

இந்தோ-சீனாவில் போர் நிறுத்த ஏற்பாடுகளைக் கண்காணிக்க நடுநிலைமை நாடுகளின் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென்று சோவியத் அயல்நாட்டு மந்திரி மாலடோவ் ஜினீவா மாநாட்டில் யோசனை கூறினார்.

வியட்மின் பிரதிநிதிகள் கூறிய சமாதான யோசனையை தோழர் மாலடோவ் இன்று ஆதரித்தார். பிரான்சின் இந்தோ-சீனக் கொள்கையை அவர் வன்மையாகக் கண்டித்து, இந்தோ-சீனப் போர் நிறுத்தத்திற்காக ஒன்பது நாடுகள் மாநாடு நடத்துவது பற்றி சோவியத் நாடு ஆராயத் தயார் என்று கூறினார்.

"இந்தோ-சீனாவில் நடப்பது உள்நாட்டுப் போர் அல்ல; அது ஒரு விடுதலைப் போராகும்," என்று கூறி அவர் வியட்மின் சர்க்காருக்கும், பிரெஞ்சு சர்க்காருக்கும் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றியும் குறிப்பிட்டார்.

சமீபத்தில் கொழும்பு மாநாட்டில் ஆசியப் பிரதமர்கள் மாநாட்டில், பிரான்ஸ், இந்தோ-சீனாவின் முழு சுதந்திரத்தையும் ஒப்புக்கொண்டு பிரகடனம் செய்ய வேண்டுமென்று நிறைவேற்றிய தீர்மானத்தை அவர் பாராட்டினார்.

அமெரிக்க நாடு, இந்தோ-சீனாவில் பிரான்சுக்குப் பதில் தலையிட முயற்சிக்கிறது என்று அவர் குற்றம் சாட்டினார்.

மூப்பத்தைந்து ஆசிய நாடுகளில் சில இன்னும் விடுதலை பெற்ற இந்தோ-சீனப் பகுதிகளை ஒப்புக் கொள்ளவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்கா-ஜப்பான் ஒப்பந்தத்தையும், ஆஸ்திரேலியா-நியூசிலந்து-அமெரிக்க கூட்டு ஒப்பந்தத்தையும் மாலடோவ் மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

போலீஸ் ஸ்டேஷன் மீது உழவர் படையெடுப்பு?

திருநெல்வேலி, மே 14—

ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா பொன்னன்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த 5 பேர்களைக் கைது செய்ததை எதிர்த்து, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 230 விவசாயிகள் கம்புடன் கூட்டமாக ஸ்ரீவைகுண்டம் போலீஸ் ஸ்டேஷனைப் படையெடுத்தனர் என்றும் அவர்கள் கையில் கம்யூனிஸ்டு கட்சிக் கொடியும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

கிராம சபையில் உறுப்பினரா யில்லாத ஒரு விவசாயிக்கு வாழை பயிரிடும் நிலத்தை நிலப் பிரபு சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் குத்தகைக்குத் தந்தாராம்; அதை கைது செய்யப்பட்ட 5 பேர்களும் எதிர்த்தனராம். சொக்கலிங்கம் பிள்ளை, குத்தகைக்கு விட்டதை ரத்து செய்ய விரும்பவில்லை. எனவே, இந்த 5 கிராம சபை உறுப்பினர்களும் புதிய குத்தகைக்கார விவசாயி, நிலத்தை உழ நுழைந்தபோது, அவரைத் தடுத்தார்களாம். உடன் விளைவு, சொக்கலிங்கம், போலீசாருக்கு அறிவித்து, அந்த ஐந்து பேர்களையும் கைது செய்யச் சென்றனர். அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதை எதிர்த்துத் தான் அந்தக் கிராமத்தினர் கம்யூனிஸ்ட் கொடியுடன், கத்தியும் கம்புமாக போலீஸ் ஸ்டேஷனைப் படையெடுத்தனராம்.

பஞ்சாப் முதலமைச்சர் மீது குற்றச்சாட்டு

—— (:) ——

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குறிப்பு

கராச்சி, மே 14—

வேண்டுமென்றே அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும், பண விவகாரங்களில் ஒழுங்கீனமாக நடந்து கொண்ட குற்றங்களுக்காகவும், பாகிஸ்தான் பஞ்சாபின் முன்னாள் முதல் அமைச்சர் தௌலத்தானாவை விசாரிக்க வேண்டுமென பாக். கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது பாகிஸ்தான் பெடரல் கோர்ட்டுக்கு குறிப்பொன்றை அனுப்பினார்.

சென்ற ஆண்டு பாக். பஞ்சாபில் நடைபெற்ற அகமதிய எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி பாக் சர்க்காரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் மீதுதான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

(மேற்படிக் கிளர்ச்சிக்குப் பின்னர் தோழர் தௌலத்தானா தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்)

பிரெஞ்சிந்திய நிட்டுகளின் எதிர்காலம் பற்றி, இந்திய—பிரான்ஸ் சர்க்காரிடையே பாரிசில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. பெரிய விவாதங்கள் ஏதுமின்றி சுமுகமான சூழ்நிலையில் 20 நிமிடங்கள் பேச்சு நடந்ததாம்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னிமலை

16—5—54 ஞாயிறு மாலை
இடம்: குமரன் சதுக்கம்
பேசுவோர்;
அருண்மொழி
அ. ச. இளங்கோ

★

இராமநாதபுரம் (முகவை)

16—5—54 ஞாயிறு மாலை
இடம்: சந்தைப்பேட்டை
தலைவர்: செங்குட்டுவன்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

எருமப்பட்டி

18—5—54 மாலை 7 மணிக்கு
தலைவர், எஸ். அப்பாவு
பேசுபவர்: ஈ. வே. கி. சம்பத்

இரவு எருமப்பட்டி பகுத்தறிவு நாடக மன்றத்தாரின் 'பதவி மோகம்' நாடகம் நடைபெறும்.

சிங்கப்பூரில் சீன மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!

சிங்கப்பூர், மே 13—

இராணுவவீரர்களைப் போல் பாரா செய்தனர்!

போலீசார் நகரெங்கும் ரோந்து சுற்றி வந்தனர்-இரவும் பகலும்!

ஆர்ப்பாட்டக்காரர் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

பலர் காயமுற்றனர்; 46 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இத்தனையும் சிங்கப்பூரில் உள்ள 900 சீன மாணவர்கள், 'தேசிய சேவைக்கு மாணவர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்" என்ற சர்க்கார் உத்தரவை எதிர்த்து, 'அரசாங்க மாளிகையின் முன் ஆர்ப்பாட்டம் செய்ததின் விளைவாக நேர்ந்தன.

சர்க்கார மாளிகைக்கு சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்த 100 மாணவிகள், போலீசார் கலைந்து போகச் சொல்லியும் போக மறுத்தனர்.

போலீசார் மாணவிகளைக் கலைந்து போகுமாறு தள்ளியபோதே மாணவிகள், அவர்கள் மீது கற்களை வீசியதின் விளைவாக ஒரு 'சார்ஜண்ட்' காயப்பட்டார்.

கமிஷனிடம் தி. மு. கழக அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகியுள்ள இந்தப் பிரச்னையை தள்ளிப்போடுவதோ, தவறான வழிகளுக்குத் திருப்புவதோ இந்த நாட்டின் அமைதிக்கும், இன்ப வாழ்வுக்கும் குந்தகம் விளைவிப்பதாகும் என்பதை இந்தக் கமிஷன் மூலம் சர்க்காருக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்த விரும்புகிறது.

(8) திராவிட முன்னேற்றக் கழகம், மொழிவாரி பிரிவினை அவசியம் என்று கூறுவதுடன் இந்த நான்கு மொழிப் பகுதிகளிடையே, வேறு எந்த மொழிப் பகுதிகளும் பாராட்ட முடியாத, ஓர் உறவுமுறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது; ஏனெனில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை; இந்த மொழி பேசும் மக்களிடை ஓர் இன உறவு உள்ளது; இந்த உறவு ஆயிரம் காரணங்களால் உலர்ந்திருக்கலாம்; ஆயினும் ஒற்றுமைக்கும் தோழமைக்கும் அடிப்படையான ஜீவசக்தியாக அந்த உறவு விளங்குகிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு பிரிவினை பற்றி பிரசாரம் செய்து வருகிறது. சுயநிர்ணய அடிப்படையில் இந்த நான்கு மொழி வழி ராஜ்யங்களின் கூட்டாட்சியே திராவிட நாடாகும். இந்தக் கூட்டாட்சி, சுதந்திர குடியரசு நாடாக விளங்கும்; ஆகவே, இந்த நாட்டு மக்கள் அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் முழு வளர்ச்சி பெற வாய்ப்புப் பெறுவர்.

(9) தற்போதைய இந்திய அரசியல் சட்டம் பல்வேறு பகுதிகளையும் வலிவற்றதாக ஆக்கியுள்ளது; எனவே, வலிவில்லாத காரணத்தால் உறுதிப்பாடில்லாதனவாய் உள்ளன என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாக உணர்கிறது. எனவே, ராஜ்யங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டியது நிலவரம்பைப் பொறுத்து மட்டுமல்ல—ராஜ்யங்களுக்கு ஒதுக்கப்படும் அதிகாரங்களைப் பொறுத்தும் மாறுதல் வேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதை இன்று எடுத்துக் கூறுவ தற்கு ஏராளமான திறமை மிக்க ஆதரவாளர்கள் உள்ளனர். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்—மொழி வழிப் பிரிவினை வேண்டும்—என்ற இரண்டின் சேர்க்கையே திராவிடநாடு கோரிக்கையாகும். ராஜ்யங்களைப் புனரமைக்கும் எந்த முயற்சியும் இந்த உண்மையை மனதில்கொண்டே செய்யப்பட வேண்டும். ஏனெனில், தேசிய ராஜ்யங்களே, அரசியல் சீர்திருத்தங்களின் நோக்கமாகவும், முடிவாகவும் இருக்க வேண்டுமேயன்றி, வெறும் நிர்வாக மண்டலங்களை நிறுவுவதாக இருக்கக்கூடாது.

(10) ஒரு ராஜ்யம், இன்பமாகவும், வளமாகவும், முன்னேற்றமுள்ளதாகவும் இருக்க ஒருமைப்பாடு தேவை; இந்த ஒருமைப்பாடு, மொழி, இனம், வரலாறு ஆகியவைகளால் உண்டாகிறது. அந்த ராஜ்யம் பொருளாதார நிறைவு பெற்றதாக இருப்பதற்கு, அது, பரந்துள்ள நிலப்பரப்பு தொடர்புடையதாய் இருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட எந்தக் காரணத்தை வைத்துப் பார்த்தாலும், அல்லது எல்லாக் காரணங்களை வைத்துப் பார்த்தாலும் திராவிட நாடு சுதந்திர ஜனநாயகக் குடியரசாக விளங்குவதற்கு உரிமையுடையது என்பது புலப்படும். மத்திய சர்க்காரில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் விளைவாக திராவிடர்களின் உள்ளத்தில் வேதனையையும் திகிலையும் உண்டாக்கியிருக்கிறது திராவிட நாடு, சாதாரண நிர்வாகமண்டல அந்தஸ்தில் வைக்கப்பட்டிருப்பதால், பொருளாதாரத் துறையில் சுரண்டல்காரர்களிடமும், அரசியல் துறையில் சர்வாதிகாரிகளிடமும் சிக்கிச் சீரழியும் வேட்டைக்காடாக ஆக்கப்பட்டுவிட்டது என்ற நியாயமான உணர்வு ஏற்பட்டுள்ளது. சுதந்திரத்தின் பூங்காற்றை அனுபவிக்க அரசியல் சட்டத்தால் அனுமதிக்கப்படும் திராவிட நாடு கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது. இந்தியாவின் வேறு பகுதிகளிலும் இம்மாதிரி கோரிக்கைகள் எழலாம்; ஏனெனில், ஒரு பெரிய பரந்த உபகண்டத்தில், இயற்கையானதும், நியாயமானதுமான காரணங்களைக் கொண்ட பல தேசிய ராஜ்யங்கள் ஏற்படுவது இயற்கையேயாகும்.

(11) பல்வேறு சுதந்திர நாடுகள் கொண்ட இந்திய காமன்வெல்த்தில், திராவிட நாடு சிறிய தோர் இடம் பெற்று விளங்கும் நிலையை எதிர்பார்க்கிறோம்; அந்தக் கமிஷன் அதற்கு பாதை அமைக்கும் என நம்புகிறோம்.

(12) இதைத் தவிர, இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரை மற்றுமொரு முக்கியமான அவசரப் பிரச்சினை உண்டு—அதுதான் அந்நிய நிட்டுகளைப் பற்றியது. வெளிநாட்டு ஆதிக்கம், அந்தத் நிட்டுகளிலிருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும், பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகியவை தமிழகத்திலும், மாஹி கேரளத்திலும், ஏனாம் ஆந்திராவுடனும் சேர்க்கப்பட வேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் வற்புறுத்துகிறது.

(13) சுருக்கக் கூறின்—

(1) திராவிட முன்னேற்றக் கழகம் மொழிவழிப் பிரிவினையை வற்புறுத்துகிறது;

(2) திராவிட முன்னேற்றக் கழகம் உடனடியாக எல்லைக் கமிஷன் நிறுவப்பட வேண்டும் எனக் கோருகிறது;

(3) திராவிட முன்னேற்றக் கழகம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பகுதிகளும், நாஞ்சில் மாவட்டமும் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறது;

(4) திராவிட முன்னேற்றக் கழகம் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் போன்ற இடங்களிலுள்ள பிரெஞ்சு ஆதிக்கம் அகற்றப்பட வேண்டும் என வற்புறுத்துகிறது;

(5) திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிப் பகுதிகள் அடங்கிய திராவிட நாட்டை சுதந்திர ஜனநாயகக் கூட்டாட்சியாக நிறுவ வேண்டுமெனக் கூறுகிறது.

மேலே விளக்கப்பட்டுள்ள கருத்துக்களை இந்தக் கமிஷன் ஆழ்ந்து கவனிக்கும் என நம்புகிறோம்.

இலங்கை இந்தியரின் துயரைப் போக்குங்கள்

இந்திய சர்க்காருக்கு சென்னை சட்டசபை கோரிக்கை

தி. ப. கட்சியினர் மீது நிதி அமைச்சர் சீற்றம்

“ அவதிக்கு உள்ளாக்கப்பட்டு, நாளுக்கு நாள் அல்லல்படுத்தப்படும் இலங்கை இந்தியரின் நிலைமையின் மாற்றம் காண இந்திய சர்க்கார் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்; நிலைமையைச் சீர்படுத்துங்கள்; நிர்க்கதியினராய் கட்லுக்கப்பால் வதியும் இந்தியர்கள் மீது கவலை கொள்ளுங்கள்,”

—என்ற கருத்துள்ள தீர்மானம் ஒன்று இன்று சென்னை சட்டசபையில் தோழர் என். நடலிங்கம் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

“ சமீபத்தில் முடிவு செய்து கொண்ட இந்திய—இலங்கை ஒப்பந்தத்திற்குப் பிறகு, இலங்கை இந்தியர்கள் நிலைமை மிகவும் கேவலமாகிக்கொண்டு வருவதைக் கண்டு இச்சபை மிகவும் கவலைப்படுவதாக இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது. நிலைமை கேவலமாகிக் கொண்டு வருவதை நிறுத்தி இலங்கைப் பிரஜைகளான இந்தியர் நிலைமையை அபிவிருத்திசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறது.”

மேற்கண்ட தீர்மானத்தின் மீது சபையினர் விவாதித்தனர்

இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், இலங்கையில் வாழ்வோரில் பெரும்பான்மையினர் தமிழர்களென்றும், அவர்களைக் கவனிக்க இந்திய சர்க்கார் கவலை காட்டவேயில்லை என்றும், இலங்கைக்கு நியமிக்கப்படும் தூதுவர்கள் தமிழர்களாயிருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

திராவிடப் பார்லிமெண்டரி கட்சியினைச் சேர்ந்த தோழர் எம். பி. சுப்ரமணியம் பேசுகையில், இலங்கை இந்தியரைக் கலந்து கொண்டு, இந்திய—இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்று கூறினார்.

அதுசமயம் நிதி அமைச்சர் குறுக்கிட்டு வெளிநாட்டுக் கொள்கை பற்றி பேசவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

சென்னை பிரதமரும், நிதி அமைச்சரும் உடன் டில்லிக்குச் சென்று இலங்கை இந்தியர் நிலை பற்றிப் பேசி மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்றும் இனிமேல் நடைபெறுகின்ற எல்லா பேச்சு வார்த்தைகளிலும், சென்னை அமைச்சர் ஒருவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பனபோன்ற பல ஆலோசனைகள் கூறப்பட்டன.

விவாதத்திற்குப் பதில் அளித்த நிதி அமைச்சர் பேசுகையில், இலங்கை இந்தியர் பிரச்னையில் இந்திய சர்க்கார் காலதாமதம் செய்தனர் என்றோ சீரிய முறையில் நடந்து கொள்ளவில்லை என்றோ கூறுவது சரியில்லை என்றும், இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க முடியாதென்றும், இந்திய சர்க்கார் இலங்கை இந்தியர்களின் துயரம் போக்க தங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்வார்கள் என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், திராவிட பார்லிமெண்டரி கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்கள் இப்பிரச்னையில் இலங்கை அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டுமென்றும், வட இந்தியர்கள் தென் இந்தியரைச் சுரண்டி வாழ்வது கூடாது என்று பேசும் கொள்கையினை உடைய திராவிடர் கழக, திராவிட முன்னேற்ற கழகத்தினரின் கொள்கைப்படி தங்கள் நாட்டில் உள்ள வேற்று நாட்டினரை வெளியேற்ற இலங்கை அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்ப்பது சரியானதாகுமா என்றும், ஆகவே அவர்கள் ஆலோசனைகளை அவ்வளவு கவலையுடன் தான் கவனிக்க வேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

கல்கத்தா சீனர் தயாரித்த செருப்புகளுக்கு கிராக்கி!

திபேத்திலுள்ள சீனர் படை ஏராளமாக வாங்குகிறது

திபேத்திலுள்ள சீன இராணுவத்தினர் தங்களுக்குத் தேவையான செருப்புகள் முதலிய பொருள்களை கல்கத்தாவிலிருந்து வாங்குகின்றனர்.

கல்கத்தாவில் உள்ள சீன செருப்பு தயாரிப்பாளர்களிடம் ஏராளமாக திபேத்திலுள்ள சீன இராணுவத்தினர் ஆர்டர் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டில் மட்டும் காலிம்பாங்கிலுள்ள தனிப்பட்ட கம்பெனி ஒன்றின் மூலம் 1,00,000 ஜோடி செருப்புகள் பூட்சுகள் கல்கத்தாவிலிருந்து திபேத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாம். மேற்கொண்டு தேவைகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

கல்கத்தாவில் 12,000 சீனர்கள் பீக்கிங் நிர்வாகத்தினை எதிர்க்கும் கொள்கையுடன் வாழ்ந்துகொண்டு அதே நேரத்தில் திபேத்திற்கு ஏராளமான பொருள்களை ஏற்றுமதி செய்கிறார்கள் என்று தெரியவருகிறது

இலங்கை சர்க்கார் நடவடிக்கை

பர்மா அனுபவத்தால் வர்த்தகர்கள் அச்சம்—70,000 பேர் தென்னாடு திரும்புவர்?

கொழும்பு, மே. 12—

இங்குள்ள இந்திய வர்த்தகர்கள் இலங்கை சர்க்காரின் போக்கைக் கண்டு கவலைப்படுகிறார்கள்; இந்தியாவிற்கு திரும்பிச் செல்ல அவர்கள் சகல ஏற்பாடுகளையும் செய்கின்றனர்.

பர்மா அனுபவத்திற்குப் பிறகு இவர்கள் இவ்வாறு கவலைப்படுவது இயற்கையே!

இந்தியரின் மூலதனம் இலங்கையில் சுமார் ரூ. 50 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. இலங்கையில் இவர்கள் வியாபாரத்தை முடித்தால் இந்திய மூலதனம் இந்நாட்டை விட்டுப் போய்விடும். இதனால் சுமார் 3,000 சிங்களவர்கள் வேலையற்றவர்களாவார்கள்.

மே 15-ந் தேதியன்று நாலு பேரடங்கிய தூதுக்குழு ஒன்றை சென்னைக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்காலிக வாச பர்மிட்டுகளை ரத்து செய்து “விஸா” முறையை இலங்கை சர்க்கார் ஏற்படுத்த முடிவு செய்திருப்பதனால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி சென்னை சர்க்காரிடம் இத்தூதுக் குழு தெரிவிக்கும்.

இலங்கை சர்க்காரின் இந்நடவடிக்கைகளினால் அடுத்த மூன்று ஆண்டுகளில் சுமார் 70 ஆயிரம் பேர் தென்னிந்தியாவுக்குத் திரும்ப வேண்டியிருக்கும். அப்படி வருபவர்களுக்குத் தக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று தூதுக்குழு சென்னை சர்க்காரிடம் வற்புறுத்தும் என்று தெரிகிறது.

நடைபாதையில் நகரக் குடி மக்கள்

2,000 குடும்பங்களை சர்க்கார் கவனிக்காதாம்!

சென்னை, மே 12—

சிங்காரச் சென்னை எழில் மிகுந்த நகரம் என்றெல்லாம் புகழப்படும் சென்னை நகரின் வீடற்றோர், வீதியில் சமைத்து, சாலை ஓரத்தில் உண்டு சாக்கடையின் அருகே நித்திரை போகும் மக்களைப் பற்றி சென்னை அரசாங்கம் அணுவேனும் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. சென்னை தெருக்களில் குடியிருக்கும் குடும்பங்களின் தொகை 2000.

அந்த இரண்டாயிரம் குடும்பங்கள் குடும்ப சுகம் பெறுவதும், குழந்தைகளுடன் கொஞ்சுவதும் தெரு ஓரத்தில்தான்! இப்படி வதைபடும் மக்களுக்கு வழி செய்ய இயலுமா என்று சென்னை சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த சென்னை சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி, ‘ஏதும் செய்ய முடியாது,’ என்று பதில் அறிவித்ததாகத் தெரிகிறது.

‘வீதியில் வாழ்வோர் மழைக் காலங்களில் குளிர் தாங்க முடியாது தவிப்பார்களே—அதற்காவது ஏதாவது வழி செய்யக் கூடாதா?’ என்ற கேள்விக்கு, அதற்கும் ஏதும் செய்ய இயலாதென்ற பதிலே கிடைத்திருக்கிறது.

ஆனால், 1953 அக்டோபரில் சென்னையில் பெய்த பெருமழையில் தெருவில் வாழும் மக்களில் பதினைந்து பேர் மாண்டுபோனார்களாம். கனம் மந்திரியார் இக்கணக்கினைக் கூறுகிறார்.

2,000 குடும்பங்கள் சென்னையில் குடியிருக்க இடமின்றித் தவிக்கின்றன! குளிரில் அவர்களில் பலர் செத்து மடிகின்றனர்; இவர்களை சர்க்கார் அலட்சியமாக்குகிறது.

சென்னை நகர சபை திட்டமொன்று தீட்டியுள்ளதாம்.

தெருக் குடும்பங்களை குடிசையில் வாழச் செய்ய அத்திட்டம் நிறைவேறும் நாள் எந்நாளோ! இக்கதியவர்கள் துயரம் நீங்குவது எந்நாளோ?

இலங்கைக்கு பொருள் உதவி

அமெரிக்க நிபந்தனை

வாஷிங்டன், மே 14—

அமெரிக்கா, இலங்கைக்கு பொருளாதார உதவி செய்யப் போவதாக செய்தி வெளிவந்ததல்லவா? அதை மறுத்து இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலை அறிக்கை கூட விடுத்திருந்தார்.

அதை ஒத்துக்கொண்ட அமெரிக்க அதிகாரிகள் “ உதவி செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை; மேலும், அமெரிக்கா ஏதேனும் பொருளாதார உதவி செய்யவேண்டுமானால் இலங்கை முதலில் செஞ்சீனாவுடன் செய்துள்ள ரப்பர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும்; பிறகு எங்களிடம் உதவி கோரவேண்டும்; அப்போதுதான் நாங்கள் அவர்களுக்கு உதவ இயலும்,” என்று கூறுகின்றனர்

கழகக் கூட்டங்கள்

★

வீடத்திலாம்பட்டி

16—5—54 ஞாயிறு மாலை

இடம்: வ. உ. சி. திடல்

தலைவர்:

மீ. சு. இளமுருகு-பொற்செல்வி

பேசுவோர்;

எம். எஸ். இரமசாமி

கே. பி. முகமது எச்சமத்

கு. துரைச்சாமி

எம். மாரிச்சி

என், வடிவேல்

ஏ. எஸ். சணபதி

★

செம்பனூர்கோவில்

16—5—54 மாலை 6 மணிக்கு

இடம்: கடைத்தெரு

தலைவர்: எம். அழகர்சாமி

பேசுவோர்:

க. அன்பழகன்

என். சி. பன்னீர்செல்வம்

★

கடலூர்

16—5—54 மாலை 6 மணிக்கு

இடம்: மஞ்சைநகர் மைதானம்

தலைவர்; இரே. பாலகுருசாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

என். வி. நடராசன்

இரே. இளம்வழுதி

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

★

தேழுந்தூர்

16—5—54 ஞாயிறு மாலை

பேசுவோர்:

வி. ஏ. பாண்டியன்

கணேசன்

கிட்டப்பா

★

திருச்சி

பாலக்கரை எடத்தெரு கிளை தி. மு. க. முதல் ஆண்டு விழா

17—5—54 மாலை 6 மணிக்கு

இடம்: ராஜகோபால் அரங்கில்

தலைவர்: எஸ். கேடமோறன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

அம்பில் தர்மலிங்கம்

எம். எஸ். மணி

---

96 மணி நேரம் சைக்கிள் சவாரி

வலங்கைமான் தோழரின் முயற்சி வெற்றி

6—5—54 வியாழன் காலை 7 மணிக்கு அவர்கள் 10—5—54 திங்கள் காலை 7 மணி வரை இடைவிடாது தஞ்சை மாவட்ட வலங்கைமான் தோழர் என். பக்கிரிசாமி (18 வயது) பொன்மலை ரயில்வே இன்ஸ்டிடியூட் மைதானத்தில் சைக்கிள் சவாரி செய்து வெற்றி கண்டார். அவரைப் பாராட்டி பலர் 9—5—54 ஞாயிறன்று பேசினர். பல பரிசுகள் தோழர் பக்கிரிசாமிக்குத் தரப்பட்டன.

கேரளத்தில் கம்யூனிஸ்டு, பி. — சோ. கட்சியினர் தமாஷ்

திருவனந்தபுரத்தை அடுத்த கெமோம் நகர டெக்ஸ்டைல் தொழிலாளர்கள் யூனியனுக்கு நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலின்போது, செயலாளர் பதவிக்கு சோவியத் பிரதமர் ஜார்ஜ் மலென்காவின் பெயரை பிரஜா-சோஷலிஸ்டுகளும், தோழர் பட்டம் தாணுப் பிள்ளையின் பெயரை பொதுவுடைமைக் கட்சியினரும் பிரரேபித்தனர்.

யூனியன் தலைவர் பதவிக்கு தங்கள் நியமனம் பெற்றவர் பி. சோ. உறுப்பினரால் தோற்கடிக்கப்பட்ட பின்னர், பொதுவுடைமைக் கட்சியினர் பட்டம் தாணுப்பிள்ளையின் பெயரைப் பிரரேபித்தனர்.

பின்னர் இரு கட்சியினரும் தங்கள் போக்கினை மாற்றிக் கொண்டு சோவியத் பிரதமர் பெயரையும், பட்டம் தாணுப் பிள்ளையின் பெயரையும் வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

நடக்கஇருப்பவை

★

மின்சார கட்டண உயர்வு எதிர்ப்புக் கூட்டம்

16—5—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு நாகை, வெளிப்பாளையம் பொதுநலச் சங்கச் சார்பில், அவுரித் திடலில் சர்வ கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெறும். மின்சாரக் கட்டணம் குறைக்கப்பட வேண்டியதின் அவசியத்தைக் குறித்துப் பலர் பேசுவார்கள்.

கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

16—5—54 ஞாயிறு மாலை 2 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணியிலுள்ள மேற்படி படிப்பகத்தில், தோழர் சீனிவாச நாராயணன் தலைமையில் சொற்பயிற்சி நடைபெறும். அதுசமயம் ‘கட்டுப்பாடு’ என்பதுபற்றி பலர் பேசுவர்.

மே தின பொதுக்கூட்டம்

16—5—54 ஞாயிறு மாலை 6½ மணிக்கு ஈரோடு, காளைமாட்டுச் சிலை மைதானத்தில், அழகிரி சொற்பயிற்சி மன்றச் சார்பில் தோழர் சின்னப்பன், எம். சி. தலைமையில் மே தினப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் அலிசேக் மன்சூர், எஸ். அப்பாவு, ஈ. ஏ. மதார்சா ஆகியோர் பேசுவர்.

வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

16—5—54 ஞாயிறு பகல் 1 மணிக்கு, வேலூர் டவுன் ஹாலில் வ. ஆ. மா. செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

பொருள்:—மாவட்ட இரண்டாவது மாநாடுகள்—இடம்—நாள் குறித்தலும், வரவேற்புக் குழு தேர்தலும்.

பெரியமெட்டு (26-வது வட்ட) தி. மு. கழகம்

16—5—54 ஞாயிறு காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, திறப்பு விழாவைப் பற்றியும், வரவு-செலவுகளைப் பற்றியும் பேசப்படும்.

சித்தூர் மாவட்ட கிளைக் கழகத் தோழர்கட்கு

“ 16—5—54 மாலை 4 மணிக்கு பொதட்டூர்பேட்டை தி. மு. கழகக் காரியாலயத்தில் சித்தூர் மாவட்ட மாநாடு நடத்துவதற்காக மாவட்டக் குழு அமைக்கவேண்டியிருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகமும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,” என்று, செயலாளர் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறிஞ்சி நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.